<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

**<u>24.03.2026</u>**

OS. No. 97/2010

பக்கம் – 4

PW1 – பால்ராஜ்

**<u>1, 2, 4, 8, 9 மற்றும் 18 பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தபால் துறையில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றேன். நான் சென்னையில் தான் பணிபுரிந்து வந்தேன். என்னுடைய நிரந்தர விலாசம் சென்னையில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் சென்னை 69, காந்திநகர், கதவு எண் 44 வசித்து வருகிறேன். என்னுடைய தந்தை வியாபாரம் செய்து வந்த அவருடைய இறுதிக்காலத்தில் மேஸ்திரி ஆக பணியாற்றி வந்தார். என்னுடைய தந்தை கோவிந்தசாமிக்கு நானும் என்னுடைய மகன் பத்மநாபன் மற்றும் என்னுடைய மனைவி ராணியும் வாரிசுகள் ஆவோம். நான் உயிருடன் இருக்கும் பொழுது எதற்காக என்னுடைய மனைவியும் என்னுடைய மகனையும் என்னுடைய தந்தையின் வாரிசுகளாக சேர்த்து உள்ளேன் என்றால் ஒருவேளை நான் தவறிவிட்டால் அவர்கள் என்னுடைய தந்தைக்கு வாரிசுகள் ஆவார்கள் என்ற அடிப்படையில் நான் சேர்த்துள்ளேன். எனக்கு வயது தற்பொழுது 75 ஆகும். தாவா சொத்து குன்றத்தூர் கிராமத்தில் அமைந்துள்ளது. தாவா சொத்து என்னுடைய தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றும் நான் அவருடைய வாரிசு என்ற காரணத்தினாலும் அதன் அடிப்படையில் அதற்கு நான் உரிமை கோருகின்றேன். என்னுடைய தந்தை என்னுடைய பெயருக்கு ஏற்படுத்திக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் தான் தாவா சொத்திற்கான உரிமையை நான் கோருகின்றேன். வா.சா.ஆ.2 ஆவணமாக செட்டில்மென்ட் ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து என்னுடைய தந்தை கோவிந்தசாமிக்கு உரிமைப்பட்டது என்பதனை காட்ட மூல பத்திரங்களையோ அவருடைய பெயரில் உள்ள கிரைய ஆவணத்தையோ நான் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய பெயருக்கு ஏற்படுத்தப்பட்ட செட்டில்மென்ட் ஆவணத்திற்கு பிறகு உடனே பட்டா என்னுடைய பெயரில் மாற்றம் செய்யப்படவில்லை. என்னுடைய தந்தை 1999

ஆம் ஆண்டு காலமானார். ஒன்றாம் பிரதிவாதி தாவா அ பட்டிகை சொத்தினை முழுவதுமாக ஆக்கிரமித்து உள்ளதாக நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தாவா அ பட்டிகை சொத்து ஒரு செண்ட் இடமாகும். அதுபோல் இரண்டு முதல் 18 பிரதிவாதிகள் தாவா சொத்துக்கள் ஒவ்வொரு பட்டியலிலும் அனுபவத்தில் இருந்து வருவதாக தான் இந்த வழக்கில் நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்